பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

06 04 2024 **SATURDAY** 6 45 **AM**

வணக்கம். மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மத்தியில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிக்கு வந்தால், சரக்கு மற்றும் சேவைவரி சட்டம் திருத்தியமைக்கப்படும் என்று திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

- அத்திக்கடவு - அவினாசி திட்டத்தை நிறைவேற்றாமல் திமுக அரசு கிடப்பில் போட்டுவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

- தமிழகத்திற்கு தேவையான காவிரி நீரை பெற்றுத் தருவதில் திமுக அரசு தோல்வியடைந்துவிட்டதாக பிஜேபி தேசிய மகளிர் அணி தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

- மனநலம் குறித்த கட்டணமில்லா Telemanas உதவி மையம் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு உயர்கல்வி நிறுவனங்களை பல்கலைக் கழக மானியக் குழு அறிவுறுத்தியுள்ளது.

- ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது..

>>>><<<<

மத்தியில் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி ஆட்சிக்கு வந்தால், சரக்கு மற்றும் சேவைவரி சட்டம் திருத்தியமைக்கப்படும் என்று திமுக தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், தொழிலாளர்களுக்கு விரோதமான சட்டங்கள் மறுசீரமைப்பு

செய்யப்படும் என்றும், சிறுபான்மை மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் சட்டங்கள் ரத்து செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளிலும், வங்கிகளிலும் பெற்றுள்ள கடனும், அதற்கான வட்டியும் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு மொத்த உற்பத்திச் செலவுடன் 50 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

>>>><<<<

அத்திக்கடவு - அவினாசி திட்டத்திற்காக அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டதாகவும், ஆனால் திமுக அரசு அந்த திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டதாகவும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், கவுந்தம்பாடியில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், இத்திட்டத்திற்காக அஇஅதிமுக ஆட்சியில், ஆயிரத்து 652 கோடி ரூபாய் ஒதுக்கி, 85 சதவீத பணிகள் முடிக்கப்பட்டதாக கூறினார்.

ஆனால், திமுக அரசு மீதமுள்ள 15 சதவீத பணிகளை கூட செய்யவில்லை என்றார்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் விவசாயிகளுக்கு 24 மணிநேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டதாகவும், ஆனால் தற்போது போதுமான அளவு மின்சாரம் வழங்கப்படவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

>>>><<<<

தமிழகத்திற்கு தேவையான காவிரி நீரை பெற்றுத்தருவதில் திமுக அரசு தோல்வியடைந்துவிட்டதாக பிஜேபி தேசிய மகளிர் அணி தலைவர் திருமதி. வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரி டெல்டா பகுதி மக்களுக்கு போதிய வேலைவாய்ப்பு இல்லை என்றும், அதிகமான கோவில்களைக் கொண்ட இப்பகுதியை ஆன்மிகம் சார்ந்த சுற்றுலா தலமாக மாற்றினால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார்.

மத்தியில் கூட்டணி அரசில் திமுக அரசு இடம்பெற்றதை விட, கடந்த பத்தாண்டுகளில் தமிழகத்திற்கு மத்திய அரசு அதிகமான நிதியை ஒதுக்கியுள்ளது என்றும் திருமதி. வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

>>>><<<<

15 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை காணவில்லை என்று சமூகவலைதளங்களில் பரப்பப்படும் செய்திகள் தவறானது என்று இந்திய தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் எதுவும் காணாமல் போகவில்லை என்றும், இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் தொடர்பான உண்மையான தகவல்களை பொதுமக்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

>>>><<<<

இனி தேர்தல் களம்,

**(MUSIC-7 sec.)**

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது நாமக்கல் மக்களவைத் தொகுதி

*(வாய்ஸ் பைட் - கண்ணன் – 80 செகண்ட்ஸ்)*

>>>><<<<

மனநலம் குறித்த மத்திய சுகாதார அமைச்சகத்தின் கட்டணமில்லா Telemanas உதவி மையத்தின் எண் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அனைத்து உயர்கல்வி நிறுவனங்களை பல்கலைக் கழக மானியக் குழு அறிவுறுத்தியுள்ளது.

இந்த உதவி எண் குறித்து பரவலாக விளம்பரப்படுத்துமாறும் உயர்கல்வி நிறுவனங்களை, மானியக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

கல்லூரி மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் நுழையும் இளம் மாணவர்கள் சவாலான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் போது, மனஅழுத்தம் மற்றும் பதற்றத்திற்கு ஆளாகவுள்ளது என்றும் அத்தகைய நேரத்தில் அவர்களுக்கு இந்த உதவி மையம் ஆறுதலாக இருக்கும் என்றும் மானியக்குழு தெரிவித்துள்ளது.

தொலைபேசி வாயிலாக மனஅழுத்தத்தைப் போக்கும் ஆலோசனை வழங்கும் முயற்சி மனநல பிரச்சினைகளுடன் போராடுபவர்களுக்கு எந்த நேரமும் ஆதரவையும், உதவியையும் வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது என்றும் UGC தெரிவித்துள்ளது.

>>>><<<<

தேனியில் உள்ள நகைக்கடை ஒன்றில், இந்திய தர நிர்ணய அதிகாரிகள் நடத்திய சோதனையில் 4 கிலோ அளவிலான போலி ஹால்மார்க் அடையாளம் கொண்ட தங்க நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

அந்த கடையிலிருந்து போலி ஹால்மார்க் முத்திரை மற்றும் ஆறு இலக்க தனித்த அடையாள எண் இல்லாத தங்க நகைகள் விற்பனை செய்யப்படுவதும், இருப்பில் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டதாக இந்திய தர நிர்ணய மதுரை பிரிவின் இணை இயக்குநர் திரு. அறிவழகன் தெரிவித்தார்.

பறிமுதல் செய்யப்பட்ட நகைகளின் மதிப்பு சுமார் 2 கோடி ரூபாய் என்றும் அவர் கூறினார்.

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் நாடு முழுவதும் தேர்தல் ஆணையம் மூலம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

இந்த தேர்தலில் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என திருப்பத்தூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் ஆட்சியருமான திரு. தர்பகராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

(சவுண்ட் பைட் - ஆட்சியர் 49 செகண்ட்ஸ்)

>>>><<<<

இருவரிச் செய்திகள்

தைவான் நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12—ஆக அதிகரித்துள்ளது.

>>>><<<<

உத்தரபிரதேச அரசின் மதரஸா கல்விச் சட்டத்தை ரத்து செய்து, அலகாபாத் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

>>>><<<<

சட்டவிரோத பணப்பரிமாற்ற வழக்கில் கைது செய்யப்பட்டு, தில்லி திஹார் சிறையில் உள்ள BRS கட்சியின் நிர்வாகி திருமதி. கவிதாவிடம் சிபிஐ விசாரணை நடத்தவும், வாக்குமூலத்தை பதிவு செய்யவும் தில்லி நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

>>>><<<<

தென்காசி மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதிகள் வாரியாக வாக்குச்சாவடிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஒதுக்கீடு செய்யும் பணி, நேற்று நடைபெற்றது.

>>>><<<<

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, திருவள்ளூரில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் திரு. பிரபுசங்கர் நேற்று தொடங்கி வைத்தார்.

>>>><<<<

சென்னை சென்ட்ரல் - அரக்கோணம் வழித்தடத்தில் திருநின்றவூர் ரயில் நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் நடைபெறவுள்ளதால், இந்த வழித்தடத்தில் இயக்கப்படும் புறநகர் மின்சார ரயில்கள் விரைவு வழித்தடத்தில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>><<<<

விளையாட்டுச் செய்தி

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய சென்னை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், ஐந்து விக்கெட் இழப்புக்கு 165 ரன் எடுத்தது.

166 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ஹைதராபாத் அணி, 18 புள்ளி ஒரு ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி, வெற்றிபெற்றது.

ஜெய்ப்பூரில் இன்று மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

**>>>><<<<**